1972 மார்ச் 13]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) உறுப்பினர் கேட்பது நீளத்தைப் பற்றியே அன்றி பரப்பைப் பற்றி அல்ல என்று எண்ணப் படுகிறது. படகுப் போக்குவரத்துக்குப் பயன்படும் கால்வாயின் நீளம் 8.9 கிலோ மீட்டர்களாகும்.

(இ) இலாபகரமாக இல்லாத காரணத்தால் படகுப் போக்குவரத்துக்குப் பயன்படுமாறு மேற்படிக் கால்வாயைக் குமரிமுனை வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நீர் பங்கீடு முறை

* 464 வினா—**திரு. சி. இராமநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ள ஏரிகளில் நீர் பங்கீடு முறையை ஒழுங்குபடுத்த தனி அலுவலர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சி. இராமநாதன் : தலைவரவர்களே, மழை நீரை நம்பி விவசாயம் செய்யும் பகுதிகளில் நீர் பங்கிடும் முறை சரியாக இல்லாததால் தண்ணீர் வீணாக்கப்பட்டு, பஞ்சம் ஏற்படுகிறது. 400-500 ஆயக்கட்டு உள்ள பெரிய ஏரிகளில் இத்தகைய அலுவலர்களை நியமிக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் இருக்கும் ஏரிகளில் வினியோகம் பொதுப்பணித்துறை அலுவலர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. எனவே, குறிப்பிட்ட குறைபாடு இருந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கும் ஏரிகளில் தண்ணீர் அளந்து விடாமல் அவரவர்கள் விருப்பப்படி எடுத்து விட்டுக்கொள்கிற அளவுக்கு மதகுகள் அமைந்திருக்கின்றன. அந்த முறையை மாற்றி அந்த மதகுகளுக்குப் பூட்டு போடும் நவீன முறையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுவாக பொதுப்பணித் துறையின் மூலமாக நல்ல பங்கீடு இருப்பதாக சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் குறையில்லை. மதகுகளை அமைக்கும் பிரச்னை தனிப் பிரச்னை. குறிப்பிட்ட இடத்தில் மதகுகள் அமைக்கவேண்டுமென்று சொல்லப் படுமானால் செய்யப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கும் ஏரிகளில் பழைய ஆயக்கட்டுத்தாரர்களுக்குத்தான் தண்ணீர் வழங்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலே பல லட்சக்கணக்கான பட்டாக்கள் கொடுத்து இருக்கிறோம். அப்படி புதுப் பட்டா கொடுத்த நிலங்களில் உள்ளவர்களை புது ஆயக்கட்டுக்காரர்கள் என்று பிரித்து வைத்து இருப்பதால், தண்ணீர் வழங்குவதில் தகராறு வருகிறது. ஆகவே, இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு புதிய பட்டாக்களை யார் யாருக்கு கொடுத்து இருக்கிறார்களோ, அந்த இடங்களில் உள்ளவர்களையும் ஆயக்கட்டுக்காரர்களாக சேர்த்துக்கொண்டு, தண்ணீர் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு ஏரிக்கு இவ்வளவு தான் என்று குறிப்பிட்ட அளவு ரிஜிஸ்டர்ட் ஆயக்கட்டுதான் இருக்கும். அவர்களுக்கு மட்டும்தான் தண்ணீர் கொடுக்க முடியும். ரிஜிஸ்டர்ட் ஆயக் கட்டு இல்லாத ஆயக்கட்டுத்தாரர்களுக்கு தண்ணீர் கொடுப்பது சாத்தியமில்லை. கொடுப்பதற்கான வாய்ப்பு இருந்தால், அந்த இடங்களில் பரிசீலிக்கலாம்.

பாலங்கள்

*465 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செஞ்சி வட்டம், திருவண்ணாமலை ரோடில் சத்தியமங்கலம் அருகில் வராகநதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற் குறிப்பு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*466 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம், மாகரம் கண்டிகை கிராமத்து மக்கள் தங்கள் வயலுக்கு செல்லும் வழியில் குறுக்கே போகும் பூண்டி உரவு கால் மீது சிறு பாலம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.